DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.180/2022 | Deposition of Witness for : PW1 |
| Name : செல்வி | Father/Husband Name : அருள்ராஜ் |
| Age : 53 | Village : பாளையங்கோட்டை |
| Taluk : திருநெல்வேலி | Calling : சமையலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 July 2025

Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed..

**முதல் விசாரணை :–**

1. நான் பாளையங்கோட்டையில் குடியிருந்து ராதாபுரத்தில் சமையலராக ஆதிதிராவிடர் நல விடுதியில் பணியாற்றி வருகிறேன். ப.சா.4 எனது மகள் ஆவார். ப.சா.4 நாசரேத் மாணிக்கவாசகபுரத்தில் வசித்து வருகிறார். எதிரியை தெரியும். அவர் எனது மகள் வீட்டிற்கு அருகில் வசித்து வருபவர் ஆவார்.

2. கடந்த 2021 ம் ஆண்டு தீபாவளிக்காக நான் நாசரேத் மாணிக்கவாசகபுரத்தில் உள்ள எனது மகள் ப.சா.4 வீட்டிற்கு சென்றிருந்தேன். எனது மருமகன் இசக்கிமுத்து ரேடியோ செட் அமைக்கும் தொழில் செய்து வருகிறார். கடந்த 05.11.2021 ம் தேதி மாலை 6.30 மணியளவில் எதிரி எனது மருமகன் வைத்திருந்த ரேடியோ செட்டில் உள்ள டியூப் லைட்டை உடைத்து விட்டார். நான் ஏன் இவ்வாறு உடைக்கிறாய் என்று கேட்டேன். உடனே அதற்கு அவர் பக்கத்தில் இருந்தவரிடம் இவ அவ என்று கேட்டார். உடனே அருகில் இருந்தவர் இசக்கிமுத்துவின் மாமியார் என்றார். உடனே எதிரி என்னை பார்த்து தேவடியா மவளே, புண்டாமவளே நீ யார் என்னை கேட்பதற்கு என்று ஆபாசமாக பேசினார்.

3. உடனே நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அவர் பின்பு என் வீட்டிற்கு வந்து மீண்டும் தேவடியா மவளே, புண்டாமவளே என்று ஆபாசமாக பேசி, வெளியே வா என்று கூறினார். நான் உடனே எதற்கு இவ்வாறு சத்தம் போடுகிறாய் என்று கேட்டேன். அதற்கு எதிரி உன்னை அடித்தால் யார் கேட்பார்கள் என்று கேட்டு, அவர் கையால் என் வலது கன்னத்ததில் அடித்தார், அதனால் நான் கீழே விழுந்து விட்டேன். உடனே அவர் காலை தூக்கி என்னை நெஞ்சில் மிதிக்க வந்தார். நான் சத்தம் போட்டவுடன், அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து விலக்கி விட்டார்கள். அதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது.

4. காயம்பட்ட நான் நாசரேத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் முதலுதவி செய்துவிட்டு, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.07.15 19:40:28 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.07.15 19:40:34 +0530

Judicial Magistrate, Sathankulam.